மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 97/2024

வாக்குமூலம்: வா.சா.1 – வெள்ளையம்மாள்

07.04.2025: சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : எனது கணவர் பெயர் என்னவென்றால் முருகன். எனது மாமனார் பெயர் வலசப்பன். திருமூர்த்தி எனக்கு என்ன சொந்தம் என்றால் கொளுந்தனார். நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் சித்தரேவு. நான் எந்த தெருவில் குடிக்கிறேன் என்றால் மேற்குத் தெருவில் குடியிருக்கிறேன். எனக்கு நான் குடியிருக்கும் வீட்டைத் தவிர வேறு வீடு உள்ளது என்றால் சரியல்ல. நான் மாயானக்கரை அருகில் கருப்புச்சாமி கவுண்டர் காலனியில் குடியிருந்து வருகிறேன் என்றால் அங்கு தான் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று தெரியுமா என்றால் காளியாத்தாள் கோவில் மேற்குப் புறத்தில் உள்ளது. அங்கு திருமூர்த்தி தான் குடியிக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு யார், யார் வாரிசு என்றால் எனக்கு தெரியாது. முருகன், திருமூர்த்தி ஆகிய இரண்டு பேர்களும் என்னுடைய மாமனாருக்கு வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்து திருமூர்த்தி வீடு கட்டியுள்ளார் என்றாலும் நான் அங்கு ஒரு போதும் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த அனுபந்தம் பட்டா வா.சா.ஆ.1 எப்போது வங்கினேன் என்றால் 2018 ஆம் ஆண்டு வாங்கினேன். தேதி எனக்கு தெரியாது. 2018 ஆம் ஆண்டு பெறப்பட்ட ஆவணம் என்றால் எனக்குத் தெரியாது. அனுபந்தம் பட்டா யார் கொடுத்தது என்றால் அரசாங்கம் கொடுத்தது. மேற்படி பட்டா பழனி வட்டாட்சியரால் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண், பட்டா எண் என்ன என்றால் நான் படிக்காதவள், எனக்குத் தெரியாது. எவ்வளவு அகலம், நீளம் தெரியுமா என்றால் 2–1/2 செண்ட் ஆகும். வழக்குச் சொத்திற்கு நான்குமால் யார் யார் இருக்கிறார்கள்என்று தெரியுமா என்றால் ரம்யா என்பவர் மேற்குப் பக்கம், மற்ற பக்கங்கள் புறம்போக்கு இடங்கள். நான் வீட்டை ஒப்படைக்கும் போது பத்திரம் எழுதி வாங்கினேனா என்றால் எழுதி வாங்கவில்லை. எந்த தேதியில் திருமூர்த்திக்கு வீட்டை ஒப்படைப்பு செய்தேன் என்றால் ஆறு மாதத்திற்கு முன்னர் விற்றேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் தேதி சொல்லியுள்ளேன் என்றால் அந்த தேதி எனக்கு தெரியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதி திருமூர்த்தி என்பவர் தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் போலியாக ஆவணங்களை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. குடியிருக்கும் வீட்டு எண் ஆதார் அட்டையில் உள்ளபடி வீட்டு கதவு எண்23 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

சொத்து வரி ரசீது பஞ்சாயத்து அலுவலகத்தில் கட்டினேன், எந்த தேதி என்றால் எனக்குத் தெரியாது, எனது மகன் தான் கட்டினார். நான் 19.09.2024 ஆம் தேதி தான் சொத்து வரி கட்டினேன் என்றால் எனக்குத் தெரியாது. 2024 க்கு முன்பு சொத்து வரி செலுத்தி வந்தேனா என்றால் எனது மகன் தான் கட்டி வந்தார், எனக்கு தெரியாது. நான் 2024 க்கு முன்பு சொத்து வரி செலுத்தவில்லை என்றாலும், பிரதிவாதி குடியிருந்ததால் தான் வீட்டு வரி செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. நான் தொடர்ந்து வீட்டில் குடியிருந்தேன் என்றால் வீட்டு வரி செலுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் வீட்டு வரி செலுத்தியதற்கு ஆதரவாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது வீட்டில் உள்ளது. சொத்து வரி ரசீது கதவு எண் என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி சொத்து வரி ரசீதில் 7/74A என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ஆதார் அட்டையில் ஒரு கதவு எண்ணும், சொத்து வரி ரசீதில் வேறு கதவு எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளதால் நான் ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண்ணில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது கொளுந்தனார் என்பதால் எனது மாமனார் பிரதிவாதி திருமூர்த்தியிடம் வழக்குச் சொத்தை ஒப்படைப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வர அனுமதித்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது, வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து பிரதிவாதியுடையது என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் எனது உறவு முறையை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேறு ஒரு இடத்தில் குடியிருந்து வருவதால் வழக்குச் சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/-செல்வி.S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.